**களுத்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினப் பேரேட்டின் படி, மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 394,305 தொகையான நூலகப் புத்தகங்களில் வருட இறுதியில் ரூபா 168,845 தொகை மாத்திரமே மூலதனமாக்கப்பட்டிருந்தமையால் நூலகப் புத்தகக் கணக்கின் மீதியும் மூலதனச் செலவினத்திற்காக வருமானத்தில் இருந்து பங்களிப்பாகும் கணக்கிலான மீதியும் ரூபா 225,460 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் முன்னைய ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த கப் வண்டியின் பெறுமதி மீளாய்வாண்டின் போதும் கணக்கீடு செய்யப்பட்டிராததன் காரணமாக ஆண்டின் இறுதியில் மோட்டார் வாகனங்கள் மறறும் வண்டிக கணக்கின் மீதியும் மூலதனப் பயன்பாட்டிற்காக வருமானத்தில் இருந்தான பங்களிப்புக் கணக்கு மீதி ரூபா 1,765,682 தொகையாகவும் உள்ளூராட்சிக் கடன் கணக்கு மற்றும் பயன்பாட்டுச் சேவைகள் கணக்கு மீதி ரூபா 1,412,774 தொகையாகவும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சித் திணைக்களத்தால் சம்பள மீளளிப்புகளில் இருந்து கழிக்கப்பட்டிருந்த கப் வண்டியின் கடன் தவணைப்பணமான ரூபா 1,059,409 மூலதனச் செலவினக் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நிலுவையான ஏனைய வருமானக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சபைத் தீர்மானத்தின் மூலம் முன்னைய ஆண்டிற்கு உரித்தான பதிவளிக்கப்பட்டிருந்த ரூபா 136,416 தொகையான வருமானம், வருமானச் செலவினக் கணக்கிற்குச் சீராக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வருமானம் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 மே மற்றும் செப்தெம்பர் மாதங்களின் போது விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 310,342 தொகையான இரு காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு இதற்காக மீள வேறு 02 காசோலைகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், புதிதாக விநியோகிக்கப்பட்ட 2 காசோலைகள் மீள் கொடுப்பனவாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய சம்பளம் ரூபா 53,316 உரிய செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) கைத்தொழில் செயற்திட்டங்களுக்கு உரித்தாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 13,062,597 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 501,465 தொகையான 03 சொத்து விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முன்னைய ஆண்டின் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 2.2.2 (ஆ), (உ), (ஊ) இல் காண்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் குறைபாடுகள் மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,971,768 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,786,395 ஆக இருந்தது.

### 2.2 வங்கிக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2009 செப்தெம்பர் மாதத்திற்கு உரித்தான உள்ளூராட்சி திணைக்களத்திடம் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய ஆதனக் கடன் வட்டித் தொகையான ரூபா 15,211 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 மே 19 ஆம் திகதி வரையிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் தேறாத காசோலையாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 179,469 பெறுமதியான காசோலைகள் கணக்காய்வுத் தினமாகிய 2015 மே 19 ஆம் திகதி வரையிலும் தேறியிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அதிகரித்து வைப்புச் செய்யப்பட்டவை மற்றும் குறைத்து வைப்புச் செய்யப்பட்டவையாக முறையே காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 9,224 தொகையும் ரூபா 64 தொகையும் இனங்காணப்பட்டு காசேட்டில் சீராக்கப்படுவதற்கு 2015 மே 19 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 17,268 | 6,027 | 5,677 |
| (ii) | வாடகை | 2,099 | 2,099 | -- |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | -- | -- |
| (iv) | ஏனைய வருமானம் | -- | -- | -- |

**2.3.2 வீதவரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வீதவரி நிலுவை மீதி ரூபா 3,274,839 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பட்டியல் படுத்தப்பட்ட வீதவரி ரூபா 8,172,730 ஆகக் காணப்பட்டது. 2014 சனவரி 01 இல் உள்ளவாறு ஆரம்ப நிலுவை மீதியில் ரூபா 870,037 தொகை அதாவது 26.5 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் நடப்பாண்டின் பட்டியல் இடப்பட்ட வருமானத்தில் ரூபா 5,107,752 தொகை அதாவது 62 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. இதன் படி, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த வீதவரி நிலுவை மீதி ரூபா 5,668,984 ஆகக் காணப்பட்டது.

**2.3.3 கடை வாடகை**

சபை நிதியத்தில் ரூபா 4,500,000 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 9 கடைகளைக் கொண்ட மொறொன்துடுவ வியாபாரத் தொகுதி 2005 திசெம்பர் 09 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது. இக் கடைகளில் 4 கடைகள் திறந்து வைக்கப்பட்ட நாள் முதலும் ஒரு கடை 2011 ஆகஸ்ட் மாதத்தில் இருந்தும் இன்னுமோர் கடை 2013 இல் இருந்தும் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 முச்சக்கர வண்டிக் கட்டணம்**

சபையில் பதிவாகியுள்ள 688 முச்சக்கர வண்டிகளில் 520 வண்டிகள் 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தான தரிப்பிட அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 312,000 தொகையை கணக்காய்வுத் தினமாகிய 2014 திசெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் செலுத்தி இருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 59,560,414 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 40,000,000 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**(அ) வெளிநாட்டுப் பயணம்**

(i) தலைவர், 15 அமைச்சர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் 06 நாட்கள் தாய்லாந்துச் செயலமர்விற்காகக் கலந்துகொள்வதற்காக ரூபா 4,037,855 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது பாதீட்டின் மூலம் வெளிநாட்டுப் பயணச் செலவினத்திற்காக எவ்வித பணமும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் படி, 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் VI ஆம் பிரிவின் 170 மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதியின் பிரகாரம் இச் செலவினத்தைச் செலவிடுவதற்கு முன் குறைநிரப்பு மதிப்பீடு ஒன்று சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது செலவினத் தலைப்பை மாற்றிச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) இவ் வெளிநாட்டுப் பயணத்திற்காக இணைந்த படிப்பணமாக தலைவரால் ரூபா 175,866 தொகையும் 15 அமைச்சர்களுக்கும் முகாமைத்துவ உதவியாளரால் ரூபா 136,131 படி பெறப்பட்டிருந்ததுடன் இதற்காக ஒவ்வொரு உத்தியோகத்தராலும் போக்குவரத்துச் செலவின உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்படாது ரூபா 2,353,962 கூட்டுத்தொகைக்காக ஒவ்வொரு உறுதிச்சீட்டின் மூலம் தலைவரின் பெயரில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) பொசன் விழா செலவினம்**

2014 ஆம் ஆண்டின் போது சபையினதும் சபையின் நலன்புரிச் சங்கத்துடன் பொசொன் வலயம் ஒன்று நடாத்தப்பட்டிருந்தது. இதற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1,770,000 தொகையாகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 970,000 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்படுவதற்காகவும், ரூபா 800,000 தொகை பிரதேசத்தில் உள்ள வியாபார ஸ்தலங்கள் மற்றும் பொது மக்கள் அன்பளிப்புச் செய்த நிதியில் இருந்து செலவிடப்படுவதற்கும் 2014 ஏப்ரல் 24 ஆம் திகதி சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி, பொசொன் வலயத்திற்காக பொது மக்கள் உதவி அனுசரணைப் பங்களிப்பு, தொரண வருமானம் மற்றும் விழா வருமானமாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 651,390 தொகைக்காக பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிராததுடன் அந் நிதி சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொசொன் வலயத்தில் நடாத்தப்பட்டிருந்த விழாவின் பற்றுச்சீட்டுக்களுக்குப் பதிலாக வினோத வரி அறவிடப்பட்டிராததுடன் 2014 யூன் 05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தலைவருக்கும் விழாவை நடாத்தியவர்களுக்குமிடையேயான உடன்பாட்டில் நாளொன்றிற்கு ரூபா 20,000 படி, ரூபா 60,000 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகையும் சபை நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொசொன் வலயச் செலவினங்களில் ரூபா 648,390 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் எழுதப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

(அ) 2013 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 618,749 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2015 மே 15 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் சேவையில் ஈடுபட்டிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்ற 11 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் தொகையான ரூபா 488,880 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2014 திசெம்பர் 12 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயலாற்றல்**

(அ) மகநெகும செயற்திட்டம்

(i) மகநெகும கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014 இன் கீழ் சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீதிகளில் பிணைப்புக் கற்கள் பதிக்கப்படுவதற்காக ரூபா 500,000 தொகைப்படியான 36 செயற்திட்டங்களுக்காக ரூபா 18,000,000

தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் 05 செயற்திட்டங்கள் மாத்திரம் வேலையைப் பூர்த்திசெய்திருந்தன.

(ii) ரூபா 4,000,000 தொகையான 07 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 5,500,000 தொகையான 11 செயற்திட்டங்களின் மதிப்பீடு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(iii) 13 செயற்திட்டங்களின் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கத்தேய ரண் அருண பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014

மேற்கத்தேய ரண் அருண பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014 இன் கீழ் பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 6,875,000 தொகையான 17 செயற்திட்டங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் 13 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்